ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

पुण्यैर्जन्मान्तरविरचितैः श्रोत्रियाणां पवित्रे
वंशे प्राप्य स्वजनिमनिशं वैरिभिः काममुख्यैः ।
संवीतस्सन् कलुषितमतिर्व्यर्थमायुर्नयन् हा
श्रीशम्भो त्वच्चरणशरणोऽद्यास्मि नान्या गतिर्मे ॥ (3)

𑌪𑍁𑌣𑍍𑌯𑍈𑌰𑍍𑌜𑌨𑍍𑌮𑌾𑌨𑍍𑌤𑌰𑌵𑌿𑌰𑌚𑌿𑌤𑍈𑌃 𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌾𑌂 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑍇
𑌵𑌂𑌶𑍇 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌸𑍍𑌵𑌜𑌨𑌿𑌮𑌨𑌿𑌶𑌂 𑌵𑍈𑌰𑌿𑌭𑌿𑌃 𑌕𑌾𑌮𑌮𑍁𑌖𑍍𑌯𑍈𑌃 ।
𑌸𑌂𑌵𑍀𑌤𑌸𑍍𑌸𑌨𑍍 𑌕𑌲𑍁𑌷𑌿𑌤𑌮𑌤𑌿𑌰𑍍𑌵𑍍𑌯𑌰𑍍𑌥𑌮𑌾𑌯𑍁𑌰𑍍𑌨𑌯𑌨𑍍 𑌹𑌾
𑌶𑍍𑌰𑍀𑌶𑌮𑍍𑌭𑍋 𑌤𑍍𑌵𑌚𑍍𑌚𑌰𑌣𑌶𑌰𑌣𑍋𑌽𑌦𑍍𑌯𑌾𑌸𑍍𑌮𑌿 𑌨𑌾𑌨𑍍𑌯𑌾 𑌗𑌤𑌿𑌰𑍍𑌮𑍇 ॥

முற்பிறவியிற்செய்யப்பட்ட புண்யகர்மாக்களால் வேதங்களை விதிப்படி குருமுகமாகக் கசடறக்கற்றறிந்து தமக்குற்ற தர்மங்களை நன்கு அனுஷ்டிப்பவர்களுமான வேதியர்களுடைய மிகவும் பரிசுத்தமான வம்சத்தில் ஜன்மாவைப் பெற்றும் எப்பொழுதும் காமம், குரோதம் முதலான சத்துருக்களால் சூழப்பட்டவனாய்க் கொண்டு அறிவுகுன்றி மனக்கலக்கம்கொண்டு என் ஜன்மாவிற்கு அவச்யம் செய்யவேண்டிய கர்மாவைச் செய்யாமல் எனது ஆயுளை வீணாகப் போக்குகின்றேன். இதைக்காட்டிலும் பெரியகஷ்டம்வேறு என்ன இருக்கிறது. ஹே சம்போ! ஸகல லோகங்களுக்கும் சுகத்தைக் கொடுக்கும் ஹே சந்திரசேகரா! உமது சரணகமலங்களைச் சரணமாக இப்பொழுது அடைந்து விட்டேன். எனக்கு வேறு யாதொரு கதியும் இல்லை. ஆகையல் என்னைக்கைவிடாமல் நீர் அவச்யம் பாதுகாக்க வேண்டும்.

ஒரு பக்தர் தாம் உத்தமமானமோக்ஷத்தைப்பெறுவதற்குத் தகுதியான சிறந்த பிராமண ஜன்மாவைப் பெற்றும் காமம் முதலான பிரபல வைரிகளால் பிடிக்கப்பட்டு ஒருவித நற்கர்மாவையும் அனுஷ்டிக்க முடியாமல் தம் ஆயுளை வீண்பண்ணிவிட்டோமே என்று மனவருத்தங்கொண்டு ஸ்ரீ பரமேசுவரரைச் சரணமாக அடைந்து தம்மை ரக்ஷிக்கவேண்டுமென்று பிரார்த்திக்கின்றார்.

உபபத்திராதிபர்,

ஆர்ய தர்மம்.
விபவ-ஞூ வைகாசி-மீ உருஉ

# "உபதேசபஞ்சகம்"

(206-வது பக்கத்தொடர்ச்சி.)

தம் ஜாதிக்கு மாத்திரம் அதிகப்பெருமை வேண்டுமென்று பிராமணர்கள் விரும்புகிறார்கள் என்பது உண்மையாய் இருந்தால் தம் ஜாதியிலுள்ள ஸ்திரீகளுக்கும் அந்தப்பெருமையை விரும்பாமலிருப்பார்களா. விதிக்கு முறணாக ஒரு காரியத்தை நாம் செய்யக்கூடாதென்று சாஸ்திரங்களுக்குப் பயந்து இவ்விதமிருக்கிறார்கள் என்று நன்கு புலப்படவில்லையா. ஆகையால் அனுவச்யமாய் பிறர்மேல் குறை கூறுவது சரியல்ல.

வேதாத்யயனத்தால் மாத்திரம் நாம் எதிர்பார்க்கும்சிரேயஸ்ஸைப் பெற முடியாதென்றும் அத்யயனம் ஆனபிறகு செய்ய வேண்டியது இன்னதென்பதையும்அறிவிக்கிறார்.

तदुदितं कर्मस्वनुष्ठीयताम् । ததுதிதம் கர்மஸ்வநுஷ்டீயதாம் ।

அத்யயனம் விதிப்படி பூரவும் ஆனபிறகு வேதத்திலோ அதின் கருத்தைப் பின்பற்றும் அடுத்தபடியாயுள்ள ஸ்மிருதி முதலான பிரமாணங்களிலோ எந்தெந்த ஜாதி வர்ணாச்ரமங்களுக்கு எவ்வித தர்மத்தை எந்தெந்தக் காலங்களில் எந்தமாதிரி அனுஷ்டிக்கும்படி சொல்லப்பட்டிருக்கின்றதோ அவ்விதம் நன்கு அனுஷ்டிக்க வேண்டும். ஸ்வனுஷ்டீயதாம் என்று கூறப்பட்டிருப்பதால் தம் சக்திக்கியன்றவரையில் நியமங்களைக் குறைக்காமலும் கர்மாக்களையும் அகாலத்தில் அருகமில்லாதவர்களைக் கொண்டு அசாஸ்திரீயமாகக்குறைத்தோ, அதிகமாகச் சேர்த்தோ, அனுஷ்டிக்கக் கூடாதென்றும் ஸபஷ்டமாகத் தெரிவிக்கிறார். இதினால் விதவாவிவாஹம், ருதுமதீவிவாஹம் தீண்டாமைஒழிப்பது, பால்ய விவாஹக் கண்டனம், ஸஹபோஜனம். முதலான காரியங்கள் சாஸ்திர விரோதமான காரியங்கள் என்றும் அவைகளைச் செய்யக்

கூடாதென்றும் நன்கு தெரிவிக்கிறார். இக்கருத்தைக் கொண்டு தான் கீதையில்

**तस्माच्छास्त्रं प्रमाणं ते कार्याकार्यव्यवस्थितौ ।**
**ज्ञात्वा शास्त्रविधानोक्तं कर्म कर्तुमिहार्हसि ॥**

**தஸ்மாச்சாஸ்த்ரம் ப்ரமாணம் தே கார்யாகார்யவ்யவஸ்திதௌ ।**
**ஜ்ஞாத்வா ஶாஸ்த்ரவிதாநோக்தம் கர்ம கர்துமிஹார்ஹஸி ॥**

அர்ஜுனன் தான் அனுஷ்டிக்க வேண்டிய கர்மம் இன்னதென்று அறியாமல் பலவாராய்ஸந்தேகப்பட்டுக்கொண்டிருக்கும்பொழுது சாஸ்திர விதியை விட்டு நம்மிஷ்டம்போல் தர்மவியவஸ்தை செய்தால் இம்மையிலோ, மறுமையிலோ, அதற்குற்ற பயனை எதிர்பார்க்கமுடியாது. ஆகையால் தர்மாதர்ம விஷயத்தில் சாஸ்திரத்தைக் கொண்டுதான் தீர்மானிக்க வேண்டும். அதற்கு விரோதமாக நாமாக ஒரு விதம் தீர்மானிக்கக் கூடாது. சாஸ்திரத்தில் உனக்கு விதிக்கப்பட்ட தர்மத்தையே நீ அனுஷ்டிக்கவேண்டுமென்று ஸ்ரீ பகவான் உபதேசிக்கின்றார்.

இங்கு சொல்லப்பட்ட கர்மானுஷ்டானமாதுது எல்லா ஜாதிகளுக்கும் பொதுவானது. வேதாத்யயனத்தில் அதிகாரமில்லை என்று கூறப்பட்ட சூத்ர ஜாதியும் வேதம் அந்த ஜாதிக்கு எந்த தர்மத்தை அனுஷ்டிக்கும்படி போதிக்கிறதோ, அவ்விதமே அனுஷ்டிக்கவேண்டியது அவசியம். இவ்விதம் மோக்ஷமென்னும் சிறந்த புருஷார்த்தத்தைப் பெறுவதற்கு ஸாதனமாக விதிக்கப்பட்ட ஸ்வதர்மத்தை துச்சமான இம்மைப் பயனைக்கருதி அனுஷ்டித்து ஜன்மாவை வீணுக்கக் கூடாதென்றும் எந்தக் கர்மாவையும் ஸ்ரீ பகவானுக்குப ப்ரீதியும் பொருட்டு அனுஷ்டிக்க வேண்டுமென்றும் அறிவிக்கிறார். **तेनेशस्य विधीयतामपचितिः தேநேஶஸ்ய விதீயதாமபசிதி:** நம்மால் அனுஷ்டிக்கப்படும் ஸகல கர்மாக்களையும் ஈசுவரனுக்கு அற்பணம் செய்ய வேண்டும். எந்தக் கர்மாவைச் செய்தாலும் பகவத்ப்ரீத்யர்த்தமென்றுதான் ஸங்கற்பித்து நடத்தவேண்டுமே யன்றி வேறு பலனைக் கருதக்கூடாது. கீதாசாரியரும்

**यज्जुहोषि यदश्नासि तत्कुरुष्व मदर्पणम् ।**
**யஜ்ஜுஹோஷி யதஶ்நாஸி தத்குருஷ்வ மதர்பணம் ।**

நீ எவ்விதம் ஹோமம் செய்தாலும், எதைப்புசித்தாலும், அவை யாவையும் எனக்கு அர்ப்பணம் செய்துவிடு. அதாவது கீழ் கூறியவாறு எந்தக் கர்மாவைச் செய்தாலும் பகவானுடைய திருப்திக்காகவென்று செய் என்று அர்ஜுனனுக்கு இந்த அர்த்தத்தையே உபதேசித்திருக்கிறார். தேநஸ்ய, என்கிற, இதற்கு வேறு பொருளும் ஏற்படுகின்றது அஃதாவது உங்களால் அத்யயனம் செய்யப்பட்ட வேதமந்திரங்களால் பகவானுக்கு அபிஷேகம், அர்ச்சனம், வந்தனம், முதலிய பூஜாகாரியங்களைச் செய்து அவருடைய அனுக்ரஹத்தைப் பெறவேண்டும். இதுதான் அத்யயனம் செய்வதற்குப் பயன் என்றும் அறிவிக்கிறார். **काम्ये मतिस्त्यज्यतां** காம்யே மதிஸ்த்யஜ்யதாம் சிறந்த வைதிக மந்திரங்களால் செய்யக்கூடிய கர்மாக்களை அற்பபலத்தில் ஆசை கொண்டு அதற்காக அனுஷ்டிக்கக் கூடாது. அவ்வித இச்சையை விலக்கவேண்டும். இங்கு காம்யம் என்கிற பதத்திற்கு ஒரு பெரியார் பொருள் கூறியிருக்கிறார். அதையும் அடியில் வருமாறு காண்க. (இன்னும்வரும்)

உபபத்திராதிபர்

---

## ஜலத்தின் சுத்தியும் அதை உபயோகிக்கும் விதமும்.

(211-வது பக்கத்தொடர்ச்சி)

சுத்தனுயிருந்தாலும், அசுத்தனுயிருந்தாலும், ஸந்தியே தான் முக்கியம். ஸ்நானம் அவச்யமில்லை என்றால் அது பாலர், விருத்தர், ஆதுரர், அதாவது நோயாளிகளின் விஷயம் ஆனதால் ஸ்நானம் செய்தவனே ஸந்தியாதி காரியங்களை நடத்த அர்ஹனுகிரான் சுத்த ஜலத்தில் ஸ்நானம் செய்தவன் சுத்தன் எல்லாவிதத்தாலும் ஜலத்தை சுத்தமாய் வைத்துக்கொள்ள வேண்டுமென்றும் ஜலம் எல்லாவிதத்திலும் மேன்மை தங்கினதென்றும். அதை அசுத்தப் படுத்தினால் ஈசுவராபராதம் வருகிறதென்றும், அனேகம் பிராணிகளுக்கு அருவருப்பைத் தருகிறதென்றும், அனேகம் வியாதிகள் ஒருவர்க்கொருவர் ஸங்கிரமிக்கிறதென்றும், தன்வந்தரீ முதலிய வைத்திய சாஸ்திரங்களும் முறையிடுகின்றன. ஒவ்வொருவரும் ஜலத்தைக் கண்டமாத்திரத்தில் அதன் "உபயோகத்தையும், குண

த்தையும், பெருந்தன்மையையும், கெடுத்துவிடாமல் அபிவிருத்திக்குக் கொண்டு வருவதனுல் உலகத்தில் ஸகல பயனையும் அடையலாம், ஜலத்தை சுத்தமாய் வைத்துக்கொள்ளாவிட்டால் நாகத்தை அடைகிறுன். பெரியோர்களின் சாபம் கிடைக்கிறது. திருஷ்டாந்தமாய் உள்ள சில விஷயங்களைச் சொல்லுகிறேன். ஸ்தலத்தில் வாழ்வனபோலவே ஜலத்திலும் பிராணிகள் வாஸம் பண்ணுகின்றன. அந்த ஜந்துக்கள் இயர்க்கையாயுள்ளதும், சாபத்தால் ஜல ஜந்துத் தன்மையை அடைந்ததும், பெரியோர்கள் வேருரூபத்துடன் வாஸம் பண்ணும் பிராணிகளாயும் இருக்கின்றன.

சங்கரபகவத் பாதாசார்யாள் நதியில் ஸ்நானத்திற்கு இரங்க அவரை முதலை பிடித்ததாயும், அவர் சரீரஸ்பரிசத்தால் முதலை ரூபம் மாறி கெந்தர்வனுனதாகவும் புராண சரித்ரம். ஹிரண்ய கெர்ப்பன் என்கிற பிராம்மணன் ஸ்நானத்திற்கு மடுவில் இரங்க அவனை முதலை பிடித்ததாயும்' அவன் புண்யசரீர ஸ்பரிசத்தால் கெந்தர்வனுனதாயும், ஆக்னேய புராணம் கூறுகிறது பிரபாஸ தீர்த்தத்தில் அர்ஜுனன் ஸ்நானத்திற்கு இறங்க கெந்தவர்கன்னிகைகள் சாபத்தால் முதலைகளாகி அதிலிருந்து அவனைப் பிடிக்க அவன் சரீரம் பட்ட மாத்திரத்தில் முதலை ரூபம் மாறி திவ்யசரீரம் வந்ததாயும் புராண சரித்திரம்.

ச்யவனரிஷி கோதாவரியில் மூழ்கி தபஸ் செய்ததாயும் வலையர்கள் மீன் பிடிக்க வலை வீசியதாயும் அவர் அப்போது எதிர்ச்சையாய் வலையில் சிக்குண்டு வெளியில் இழுக்கப்பட்டதாயும்,வலையர்கள் பெரிய மீன் வருகிறதென்று சந்தோஷித்திருக்க வெளிவந்த மாத்திரத்தில் பாசியும் கேசமுமாய் இருந்த ரிஷியைக்கண்டு வலையர்கள் பயந்து சாபம் கொடுக்காதிருக்க வேண்டலும் ரிஷி தன்னை உங்களுக்கு ஆஹாரமாய் ஈசுவரன் கொடுத்தார் என்னை விற்று வயர் வளவுங்கள்என்றுகூறியதைஅரசன்வரை தெரிந்து அரசன் வந்து என்ன கிரயம்தருவதுஎன்று கேழ்க்க என்னவ்வளவு நிரை பொன் தரும்படி கட்டளையிட ரிஷியை ஒரு தட்டிலும், பொன்னை ஒரு தட்டிலும் போட பொக்கிஷத்தின் பொன் அவ்வளவும் காணுமல் போய் விட்டது. ரிஷியின் தட்டு கிளம்பவில்லை. பிறகு அரசன் பயந்து மந்திரியை யோசிக்க மந்திரி பெரியோர்களின் மகிமையைக் கணக்கிட முடியாது. அபார சக்திவாய்ந்த

வர்கள், ஆனதால் பொன்னை நீக்கி ஒரு பசுமாடும் கன்றும், வைத்தால் சரியாயிருக்குமென்று சொன்னார். பிறகு நல்ல பசுமாடும் கன்றும் மருகட்டில் வைக்க ரிஷிதட்டும் அதுவும் சரிப்பட்டது. பிறகு அந்த மாட்டை வலையர்களுக்குத் தந்து ரிஷி யதாஸ்தானம் போனார். இப்படி மகிமை தங்கிய மகான்கள் எத்தனையோ பேர் ஜலத்தில் வாஸம் செய்கிறார்கள்.

இன்ன ஸமுத்திரத்தில், இன்ன நதியில், இன்ன தடாகத்தில் இன்ன ஜலபாகத்தில் வாழும் ஜந்துவானது இயற்கையாயுள்ளதென்றும் சாபாதியால் வந்தகென்றும், பெரியோர்கள் வேறுருக்கொண்டு வாஸம் செய்கிறார்களென்றும் தெரிந்து கொள்வது ஜீவராசிகளால் முடியாத காரியம். நாம் ஜலத்தில் செய்யும் அசுத்தங்களை ஜல ஜந்துக்கள் உட்கொண்டு அந்த ஜல ஜந்துக்களை வலையர்கள் பிடித்து அவைகளை உலகத்தார் ஆஹாரமாகக்கொண்டு ஜீவஹிம்ஸையால் வரும் பாபமும் அசுத்தங்களும் சேர்ந்து திரண்டு அசுத்த பரம்பரை நீடித்து ஜனங்கள் பல விதமான வியாதிகளுக்கு உள்ளாகி இவர்களுக்கு ஜனிக்கும் குழந்தைகள் துஷ்டர்களாயும். பலஹீனர்களாயும் அற்பாயுளை யுடையவர்களாயும் அந்தப் பிராணிகளின் சாபத்திற்கும் ஆளாகிறார்கள். இதனால் ஜீவவதை கூடாது என்பது வியக்தமாய்த் தெரிகிறது. உதாஹரணம் ஆண்மான் பெண்மான் ரூபமாய் விஹரித்துக்கொண்டிருந்த ரிஷி தம்பதிகளை பாண்டு மகாராஜன் வில்லாலடிக்க அவை உயிர் துறக்க பாண்டுவுக்கு தீராசாபமிட்டன. வேட்டையில் ஆஸக்தி வைத்ததால் அப்படியாயிற்று. இது போல் ஜலவாழ்வனவிலும் உள்ளது. அதனால் ஜலத்தைக் கெடுக்காமலும், ஜல ஜந்துக்களைப் பிடிக்காமலும், ஜலத்தில் தவளை முதலிய ஜந்துக்களின் மேல் கற்களை எறியாமலும்ஜலத்தைத்தூஷிக்காமலும் இருந்தால் நாம் ஸகல ஸௌக்கியங்களையும் அடையலாம்.

மனிதர்களால் ஜலத்தில் செய்யக் கூடிய அசுத்தங்களை அடுத்த ஸஞ்சிகைகளில் வெளியிடுகிறோம்.

(இன்னும் வரும்)

பனயப்பட்டி வேங்கடேசய்யர்,

# காலத்தின்கதி.

(238-வது பக்கத்தொடர்ச்சி.)

1. விதவாவிவாஹம் செய்யலாமென்பது சட்டமாயிருக்கிறதாம். இது அநேகருக்குத் தெரியாது. ஆனால் இது எல்லோரும் செய்யவேண்டும். இல்லாவிடில் கிரிமினல் தண்டனை என்று இப்போதிய மேதாவிகள்போற் செய்யாததாலும் இதன் விஷயத்தில் தன் ஆயுள் முடியப் பாடுபட்டு ஊர்ஊராய்த் திரிந்து ஏராளமான பணவிரயம் செய்தபோதிலும் மிகவும் அசாஸ்திரீயமும் மங்களமற்றதுமான இக் கர்மாவில் 100-க்கு 1 வீதம்கூட முன் வராததால் இச்சட்டத்தை நம்மவர் லக்ஷ்யம் செய்யவில்லை.

2. பூபேந்திரநாத்பாஸு என்பவர் ஒரு பில் கொண்டுவந்தார். அதன் நோக்கமாவது, ஓர் ஹிந்துவென்பவன் மனுஷ்ய ஸ்திரீயாரையும் இருவரும் சம்மதித்து ரிஜிஸ்டர் செய்துகொண்டு மணம் புரிந்துகொள்ளலாம். அப்படிச் செய்துகொண்டவர்களும் அவர்களுக்கு ஏற்படும் ஸந்ததியும் இந்துக்கள்தான். அவர்களுக்கு இந்து லா ஒத்துக்கொள்ளும். ஆனால் இதை யாவரும் செய்யவேண்டுமென்று நிர்ப்பந்தமில்லை. இஷ்டப்படுகிறவர்கள் செய்துகொள்ளலாம் என்பதே இதைச்சட்டமாக்குவதற்காக உலகிற் பிரசாரம் செய்யவேண்டுமென்று வரும்போது அக்கக்ஷியார் அரும்பாடுபட்டனர். அவர்களுக்கு அந்நோக்கம் வரக்காரணம் யாதெனலாம். யாதெனில் பிர்மஸமாஜமென்று ஒன்றிருக்கிறதென்று முன்னமே கூறினேன், அச்சமாஜத்தார்தான் இவ்விதம் இஷ்டப்படி இருக்கலாமென்றாரம்பித்தனர். அவ்விதம் செய்ததில் அவர்களுக்கு உண்டாகும் ஸந்ததிக்குப் பாக விஷயத்தில் பல தடவை வ்யவகாரமேற்பட்டபோது கோர்ட்டார் இவர்களுக்கு எந்த லாவை வைத்துத் தீர்ப்புக் கூறுவதென்று தத்தளித்துக் கடைசியில் அச்சமாஜத்தாரின் கொள்கைப்படி ஹிந்து லாவில் இடமில்லாததால் நீங்கள் அவ்விதம் விவாஹம் செய்வதை விட்டுவிடவேண்டும். அல்லது நான் ஹிந்துவல்லவென்று கவர்ன்மெண்டில் எழுதிவைத்துவிட்டு விவாஹம் செய்துகொள்ளவேண்டுமென்று கூறிவிட்டனர். அவர்கள் தன் ஸமா

ஜம் போய்விடுமென்று நினைத்து அவ்விதமே விவாகத்திற்குமுன் நான் ஹிந்துவல்லவென்றே எழுதிக்கொடுக்கிறார்கள். பாஸு அவர்கள் பிர்மஸமாஜத்தைச் சார்ந்தவர், அவர் புத்திமானானதால் நாம் ஹிந்துவாய் இருந்து வேதபாகத்தையும் கிருஷ்ணனையும் நம்பியும் இந்துவல்லவென்று என் எழுதிவைக்கவேண்டும் என்று நினைத்து ராஜாங்கத்தாரிடம் கேட்பதிற் பயனில்லை. உலகில் யாவரையும் இவ்விதமடித்துவிடுவோமென்று தந்திரமாய்க் கொண்டுவந்தார். அச்சமயம் மிக பகிரங்கமாய் வேதசாஸ்திரம் தெரிந்தவர்களுடையவும் அதன் அனுஷ்டானத்தை நடத்துபவர்களுடையவும் அபிப்பிராயமே வேண்டுமென்று வைஸ்ராய் கௌன்ஸில் மெம்பர் விரும்பி விட்டபடியால் அப்படி கிராமம் கிராமமாய்க் கேட்கும்போது நமது லௌகிக புத்திமான்களில் சிலரைத் தவிர ஒருவரும் ஏற்றுக் கொள்ளாததால் அக்காயிதத்தைத் தூக்கி எறிந்து விட்டார்கள். பிறகு மறுபடியும் அதே மசோதாவைக் கொஞ்சம் மாறு வேஷத்தால் மறைத்து டாக்டர் கவர் அவர்கள் கொண்டு வந்தார்கள். பழையபடி அதேமரியாதைதான் கிடைத்தது. திரும்பவும் படேல் அவர்கள் கொண்டு வந்தார்கள், அதற்குச் சரியான முடிவு ஏற்பட்டதாய்த் தெரியவில்லை,

பிறகு சென்னையில் சில பிரபலஸ்தர்கள் சேர்ந்து பிராமணப் பெண்களுக்குப் ப்ரௌடையான பிறகு விவாஹம் செய்வதுதான் சாஸ்திரீயமென்று யுக்தியாய் V. S. ஸ்ரீனிவாஸசாஸ்திரிகள் பெயர்போட்டு சாஸ்திரார்த்தங்களைத் தப்பர்த்தம் செய்து புஸ்தகம் அச்சிட்டு ஆஸ்திகர்கள் மனதைக்கலக்கி ஓர் சட்டம் கொண்டு வந்தனர். முதலில் பார்த்தவுடன் அவர்கள் அபிப்பிராயம் மலைபோற் கிளம்பி யாவரையும் அமிழ்த்திவிடும் என்று பயந்த காலத்தில் ஸ்ரீ மஹாமஹோபாத்தியாய பண்டித ரத்தனம் வேதாந்த கேஸரி பிர்மஸ்ரீ கணபதிசாஸ்திரிகளென்ற மஹான் அம்மலையைத் தன்வாக்கென்ற வஜ்ஜிராயுதத்தால் பொடி செய்துவிட்டார்கள். அப்படியே அச்சட்டம் ஒழிந்தது.

4. பிறகு யாதொன்றுமில்லாமலிருந்தது. சென்னை மாகாணத்தில் பிராமண அப்பிராமணக் கக்ஷி வலுத்தது. அப்பிராமண ஸகோதரர்களுக்கு ராஜாங்கத்தில் சலுகை விசேஷமாய் ஏற்பட்டது. அதைக்கொண்டு கனம் பணக்கால் ராஜா அவர்கள் ஓர்

யில் கொண்டு வந்தார்கள். அது மிக விசித்திரமானது. அதற்கு ஹிந்துமத தர்ம பரிபாலனச் சட்டம் என்று பெயர். இதைக் கொண்டுவந்த அவர்கள் வெளிப்படையாய்ச் சொன்னது யாதெனில்

நமது தர்மஸ்தாபனங்களில் உள்ள தர்ம சொத்துக்கள் அநியாயமாய் வீண் வழிகளில் செலவாகிறது. அதைச் சரிவர விநியோகிக்கப் பாதுகாப்புச் சட்டம் ஒன்று இல்லாமல் போனுல்முழு மோசமாய் துர்விநியோகத்திலேயே போய்விடும். இச்சட்டம் அவசியம் என்றும் இச்சட்டம் முன் சட்டம்போல் கிராமங்கள் தோறும் வந்து நம்மவர்கள் காதிற்போட்டு நமது அபிப்ராயத்தைக் கேட்க அவகாசம் கொடுக்கப்படவில்லை. ஏனெனில் அவ்விதம் கொடுத்தால் அவசியம் நமது சட்டம் பஞ்சாய்ப்பறந்துவிடுமென்பது கொண்டு வந்தவர்களுக்கு நன்ருய்த் தெரியும். இதில் ஒருவிதமான ஸாதகமுமில்லை. மற்று நமது மதத்தின் முக்கியாம்சத்தில் மண்ணைப் போடுகிறதாயிருக்கிறது. கொண்டுவந்தவர்களாவது இதனுல் பூரணஸாதகமுண்டு என்றுஉண்மையாய் நினைத்திருந்தார்களோ என்றுல் இல்லை. மற்று அவர்களது அபிப்பிராயம் யாதெனில் நான் முற்கூறியபடி குடும்ப கலகத்தில் அண்ணன் தம்பி சச்சாவினுல் தம்பி கோர்ட்டுக்குப் போனது போல்தான்.

இவர்களது அபிப்பிராயம் யாதெனில் தர்மஸ்தானங்களான மடம் தேவஸ்தானம் முதலியவைகளில் பார்ப்பனர்களே விசேஷமாய் உண்டு வளர்கிருர்கள். இந்தச்சட்டம் பாஸ் செய்தால் அவர்களின் அட்டகாஸத்தை அடக்கி விடலா மென்பதே.

இவர்கள் நினைப்பது போல் இது இருக்கலாம். ஆனுல் கொஞ்சம் தீர்க்கதரிசிகளாய் இதையும் ஆலோசித்திருக்கலாம். இச்சட்டம்பார்ப்பனர்களை ஒருவிதமாய் பாதித்தாலும்முழுமையும் அவர்கள் கொட்டம்அடங்கிவிடுமா. இச்சட்டத்தால்நம்மவர்களுக்குப் பூரணசௌகர்யமுண்டாகுமா. இதனுல் தேவஸ்தானங்களும் மடங்களும் நன்குதழைத்தோங்குமா. அச்சொத்துவிருத்தியாகுமா. நம் ஸந்ததியார்களுக்கு இதனுல் மிகுந்த க்ஷேமலாபம் உண்டாகுமா வென்று. இவ்விதம் யோசித்திருந்தால் கிட்டவேவந்திருக்கு

மாட்டார்கள். இதற்குப்பொருத்தமான சிறுகதையைக்கூறுவது இங்கு உசிதம்.

ஓர் கிராமத்திலிருந்து சிவன் என்ற சப்தத்தைக்காதிற்கேட்காதவரும் சிவனது கோவிலேயும் அவனது அடியார்களேக்கண்டுவிட்டாலும் ஹரிஹரி என்று சொல்லிக்கொண்டு தலேமுழுகுபவருமான வைஷ்ணவசிகாமணி ஒருவர் அயல் கிராமத்திற்குச்சென்றார். புறப்பட்டவேளே கடும் வெய்யில் சமயமானதால் தேகத்தின் எரிச்சல் தாங்காமல் காட்டில் ஓர் கோபுரத்தைக் கண்டார். உடனே நிழல் கிடைக்குமென்ற சந்தோஷங்கொண்டு அதிவேகமாய்ச் சென்று அக்கோபுரத்தனடி சேர்ந்தார். உடனே மிகப்பழமையான அக்கோபுரத்தின் பிம்பத்தின் மேல் ஓர் காக்கை வந்து உட்கார்ந்தது. தக்கணமே அது உட்கார்ந்த அப்பிம்பத்தின் செங்கல் ஒடிந்து விழுந்து நம் வைஷ்ணவசிகாமணியின் மூக்கின்மேல் விழுந்து மூக்கை அறுத்து விட்டது. ரத்தம் பெருகுகிறது. வேதனே சஹிக்கவில்லே தேஹத்தில் எரிச்சல் ஒருபுறம் துக்கம் தாங்காமல் வருகிறது. வியர்வையையும் ரத்தத்தையும் கண்ணீரையும் துடைத்து முடியவில்லே. வைஷ்ணவர் என் செய்வார் பாபம். உடனே துக்கத்தோடு அண்ணாந்து பார்த்தார். இன்னெரு பக்கத்தில் உட்கார்கின்ற காக்கையும் அங்கிருந்துசரிந்து விழுகின்ற செங்கல் தூளேயும் காரைப்பொடியையும் பார்த்தார். ஆஹா ! இந்தக்காக்கையல்லவா என் மூக்கை அறுத்தது என்று கடிந்து கொண்டிருக்கும்போதே இன்னென்றைக்கண்டுவிட்டார் உடனே துக்கமெல்லாம் போனவிடம் தெரியவில்லே. ஆனந்தத் தாண்டவம் போட்டார். காக்கையை அடிக்கடி புகழ்ந்தார். அதென்னவென்றுகேட்டால் அதைக்கூறுகிறேன்.

அதில் நந்தி விருஷப வாகனத்திற் பரமசிவன் பூதகணங்களிருப்பதைப் பார்த்தால் ஆஹா என்னவோ ஓர் இடத்திலல்லவா தெரியாத்தனமாய்த் தங்கிவிட்டேன். அதற்குப் பிராயச்சித்தம் இது, போனலும் போகட்டும், அப்படி இடித்துத்தள்ளப்பா வீர வைஷ்ணவக்காக்கையே என்றாராம்.

நேயர்களே ! இதுபோலவே இந்தச் சட்டத்தைப் பாஸ் செய்துவிட்டனர். இது விசேஷமாய் நம்மவருக்குத் தெரியாது. தெரிந்த நம் சட்டசபை மெம்பர் சிலர் அரும் பாடுபட்டுவாயிதாக்

கேட்டுப்பார்த்தனர். பலிக்கவில்லை. ஒருவர் ஸபையிலேயே இதைப் பாஸ் செய்ய ஒருபோதும் விடமாட்டேன். மீறிப் பாஸ் செய்தாலும் அதை உதரித்தள்ளக் கங்கணம் கட்டிக்கொள்வேனென்று மார்தட்டி சிங்க கர்ஜனம் செய்தனர். யாது பயன். வைஸ்ராய் அவர்களையும் பேட்டி கண்டதில் இதைப் பாஸ் செய்யமாட்டார்களென்றே நம்பியே திரும்பி வந்தார்கள். என்ன செய்யலாம். அப்போது ராஜாங்கம் நம் அப்பிராமண வீரர்கள் கையிலிருந்ததால் அப்படியே பாஸ் ஆய்விட்டது. பாஸ்செய்யும் காலத்தில் அனுவாதம் செய்த கூத்தை அவசியம் கூறவேண்டும். யாவரும்கவனிக்க வேண்டும்.

இனி இது பாஸ் ஆகாமலிராது. நம் தடை இதிற் பயன் படாதென்று தெரிந்ததும் சரேலென்று ஆஸ்திக மெம்பர்கள் ஓட்டுக்கொடுக்கலாகாது. இப்பாபத்திற்கு நாம் ஆளாகவேண்டாம். இந்த அனீதியை நாம் பார்க்கவேண்டாமென்று வெளியேகி விட்டனர். பிறகு பாஸ் செய்யலாமாவென்று ஸபையில் கேட்கும்போது செய்யலாமென்று சம்மதிகொடுத்து விட்டனர். கொடுத்தவர் யார். நம் மதத்திற்ப் பற்றுள்ள மகமதிய சகோதரர்கள், கிறிஸ்தவசகோதரர்கள் ஆங்கிலப் பிரபுக்கள் இவர்களே.

ஆஸ்திகர்களே! கவனித்தீர்களா நம்மதத்தைக் காப்பவர் யார். மகம்மதியர்களும் கிறிஸ்தவர்களுமா இவ்வளவு ஸ்திதிக்கு நம்மதம் வந்தகாரணம் யாது. இதுவிஷயத்தை இதுகாறும் கேட்டறிந்திராத நம் ஆஸ்திகர்களது ரத்தம் கொதிக்கும், யாது செய்யலாம். நமக்கு ஆண்மையில்லை. ஆண்மையுள்ள நம்மவர்கட்கு மதஸ்வரூபம் தெரியவில்லை. அவர்களைத் தெரியும்படி செய்யலாமாவென்றால் ஒருகாலத்திலும் இல்லை. அவர்களுக்கு ஆங்கிலம் கற்காத பண்டிதர்களை மனிதர்களாகவே நினைக்க மனம் இடம் கொடுக்கவில்லை. நாம் ஆண்மைப் பெறலாமா. அதுவுமாகாது. ஆங்கிலம் கற்காத நமக்குச் சட்டசபையில் இடம் கிடைக்காது கிடைத்தாலும் கிடைக்க வேண்டியவனுக்குக் கிடைக்கவே மாட்டாது. கிடைத்தவனும் அங்குபோய் உட்கார்ந்தவுடன் பிரமித்துக்கொண்டிருப்பான். பிரபுக்கள் ஆங்கிலத்திற் பேசுவார்கள். என்ன பேசுகிறார்களென்று மெதுவாய்ப் பக்கத்திலிருப்பவரை இவர் கேட்பார். அவர் நடக்கிறதை விட்டு வேறொன்றைப் பகர்வார். உங்களது அபிப்பிராயம் என்ன வென்பார். எனக்கு இது சம்

மதமில்லை என்பார். பிறகு இவரைக் கேட்டால் பக்கத்து நண்பர் கூறுவது எனக்குச் சம்மதம் என்பார். இவ்விதம் காலம்போய்க் கொண்டிருக்கிறது. இந்தக் கதை இப்படியிருக்கட்டும். இப்போது நடக்கவேண்டியதை கவனிப்பாம்

தற்சமயம் இவ்வளவு அனர்த்தங்களுக்கு நடுவில் தற்கால அனர்த்தம் சென்னைச் சட்டசபையிலும் வைஸ்ராய் சபையிலும் ஒரே ஒரு விஷயம் சட்டமாக்கப்படுவதற்குப் படியேறி நிற்கிறது. அது யாதெனில்

5. இந்தியச்சிறியவர் சிறுமியின்விவாகவிஷயமாம். இதைச் சற்று விளக்கிக்கூறுகின்றேன். இக்காலத்தில் நம்இந்தியருள்விவாகத்தை 10-வயதிற்குட்பட்டுஸ்திரீகளுக்கும்15-வயதிற்குட்பட்டும் மேற்பட்டன பையன்களுக்கும் நடத்திவைக்கப்படுகிறது. இவ்விதம் நடத்துவதில் சொல்லமுடியாத பற்பல அனர்த்தங்கள் நேர்ந்து இந்தியாவைப் பாழாக்குகிறது. ஆகையால் நம் இந்தியா கஷ்டத்திலிருந்து விடுபட வேண்டுமாயின் அதற்கு மூலகாரணமான அனர்த்தத்தை அகற்றவேண்டும். அதன் காரணம் பால்ய விவாகமே. இதனால் உண்டாகும் கெடுதல்களாவன:—

1. பால்ய விவாகம் செய்வதால் விவாகத்தின் அர்த்தமே ஏற்படவில்லை. அது பொம்மை விவாகம்போல் ஸ்திரீ புருஷர்களாக இருவரும் அனுபவிக்க வேண்டிய சுகதுக்கத்திற்கு அவ்விருவர்களே பொருப்பாளர்களாகையால் அவர்கள் சம்மதமில்லாமல் நடப்பது கேவலம்.

2. இப்பால்ய விவாகத்தால் கண்கண்டு சகிக்க முடியாத துக்கங்களை அநியாயமாய் ஸ்திரீகள் அனுபவிக்க நேரிடுகிறது. அதாவது தன் விவரம் தெரியாத மிக அல்ப வயதிலேயே பொம்மைத் தாலி கட்டிவிட்டுப் புருஷனிறந்தானென்று அதை அறுத்தும் எறிந்து அக்குழந்தை விவரம் தெரியும் காலத்தில் ஏன் நான் லோகசுகத்திற்கு ஆளாகவில்லை என்று தயங்கி அனேக கஷ்டங்களுக்குள்ளாகிறது.

(இன்னும் வரும்.)

M N, சுப்பிரமண்யசாஸ்திரியள்.